தமிழ்நாடு சட்டப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2041 - சித்திரை 3

2010 ஏப்ரல் 16, வெள்ளிக்கிழமை

சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், புதிய சட்டப் பேரவை-தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து."

ஒரு தலைமுறையில் பெறும் கல்வி அறிவானது, ஏழேழு தலைமுறைக்கும் பாதுகாப்பாக அமையும்.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .*

திரு. சி. ஞானசேகரன்: Mr. Speaker Sir . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்றைக்கு இரண்டு அமைச்சர்கள் பதிலுரை ஆற்ற முடியாமல் இன்றைக்கு எடுத்திருக்கிறோம். இன்றைக்கு பள்ளிக் கல்வித் துறை மானியம் வேறு இருக்கிறது. நேரத்தின் அருமை கருதி எல்லோரும் கொஞ்சம் co-operate செய்தால்தான் அலுவல்களை அன்றன்றைக்கு முடிக்க முடியும். (குறுக்கீடுகள்) தினமும் இப்படிச் செய்தால் எப்படி?

நேற்றைக்கு நீங்கள் பார்த்தீர்கள் அல்லவா? நீங்கள் அப்படிச் செய்ததனால் இன்றைக்குக் கேள்வி—பதில் நேரம் இல்லாமல் போய்விட்டது. (குறுக்கீடுகள்) திரு. சாமி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

(ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, கருங்கலூர் பகுதியில் காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி.கே. மணி, என்ன, சொல்லுங்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்திற்குட்பட்ட எங்களது மேட்டூர் தொகுதி, கொளத்தூர் காவல் நிலைய எல்லையில் கருங்கலூர் பகுதியில் சாதாரண ஒரு பிரச்சினைக்காக காவல் துறை துப்பாக்கிச் சூடு நடத்தி, அந்தத் துப்பாக்கிச் சூட்டில் சாமித்துரை என்பவர் கவலைக்கிடமான நிலையில் காவல் துறையினரால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார். அதைப்போல் திரு. ஐயப்பன், திரு. காமராஜ், திரு. துரைசாமி, திரு. ராஜா போன்றவர்கள் எல்லாம் அடிபட்டு மிக மோசமான நிலையில் இருக்கின்ற காரணத்தினாலே, ஒரு சாதாரணப் பிரச்சினைக்குத் தேவையில்லாமல் துப்பாக்கிச் சூடு நடத்துகிற அளவுக்குக் காவல் துறை போகிறது என்று சொன்னால், இது மிகவும் வருத்தம் அளிக்கிறது, வேதனையானது என்பதை நம்முடைய அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, இதில் உரிய நடவடிக்கை எடுத்து பாதுகாப்பு அளிக்குமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லுங்கள், திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், முந்தைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுக் காலத்திலே கரும்புக்கு. . .

2010 ஏப்ரல் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன், இதுகுறித்து நான் என்னுடைய முடிவைச் சொன்னதற்குப் பிறகுதான் உங்களுக்கு அந்த வாய்ப்பு வரும். என்னுடைய முடிவைச் சொல்வதற்கு முன்பு திரும்பத் திரும்ப அதை நீங்கள் raise செய்வதால் எந்தவிதப் பிரயோஜனமும் இல்லை. உட்காருங்கள்.

(இ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் பஜாரில் சமூக விரோதிகளினால் பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன், சொல்லுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய வேலூர் மாவட்டம், திருப்பத்தூரில் சில சமூக விரோதிகள் பஜாருக்குள் நுழைந்து நகைக் கடைகளையெல்லாம் அடித்து நொறுக்கி 6 பேரை காயமுறச் செய்து, அவர்கள் எல்லாம் மருத்துவமனையில் சிகிச்சை பெறுகின்ற காரணத்தினால் நேற்றிலிருந்து வியாபாரிகள் எல்லாம் கடை அடைப்புச் செய்து, போராட்டத்திலே குதித்திருக்கிறார்கள். சட்டம்-ஒழுங்கு அந்த இடத்திலே கொஞ்சம் நிலை தடுமாறுகின்ற காரணத்தினாலே, நான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவனத்திற்கும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் கவனத்திற்கும் கொண்டு வந்து, எப்படியாவது அந்த இடத்தில் காவல் துறையைக் கொஞ்சம் சட்டத்தை சரியான முறையில் செயல்படுத்த வைத்து, கடை வியாபாரிகளையெல்லாம் சமூக விரோதிகள் அடித்து நொறுக்கக்கூடிய நிலையிலிருந்து அவர்களைக் காப்பாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் — தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வேல்முருகன், உங்கள் கட்சி சார்பாக திரு. ஜி.கே. மணி அவர்கள் பேசிவிட்டார்கள். Please உட்காருங்கள். (குறுக்கீடு) அவ்வளவுதான். (குறுக்கீடு) மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே மாண்புமிகு உறுப்பினர்கள் சில நேரங்களில் ஐயப்பாட்டைக் கிளப்புவதிலோ, அரசினுடைய கவனத்திற்கு ஒரு செய்தியைக் கொண்டு வருவதிலோ தவறு ஒன்றுமில்லை. ஆனால், என்ன செய்தியைக் கொண்டு வரப் போகிறார்கள் என்று Treasury Bench-க்கு தெரிந்தால்தான் அதற்கு விடை அளிக்கக்கூடிய ஆயத்தத்தோடு நாங்கள் வர முடியும். பத்திரிகைகளில் வருகின்ற செய்திகளை ஒவ்வொரு உறுப்பினரும் எழுந்து, எழுந்து சொன்னால் எங்களால் எப்படிப் பதில் சொல்லமுடியும்? எனவே, தாங்கள் அருள்கூர்ந்து--அவர்கள் கேட்பதற்கு உரிமை உண்டு. பதில் சொல்வதற்கு எங்களுக்குக் கடமை உண்டு. எனவே, அவர்கள் கேட்பது நியாயம் இல்லை என்று நாங்கள் மறுக்கவில்லை. உறுப்பினர்கள் என்ன கேட்க விரும்புகிறார்களோ, அதைத் தங்களிடத்திலே தெரிவித்து, இதை இந்த உறுப்பினர் கேட்க விரும்புகிறார், அரசுத் தரப்பில் பதில் இருக்கிறதா என்று கேட்ட பிறகுதான் அதை நீங்கள் அனுமதிக்க வேண்டும். இல்லாவிட்டால் கேள்வி மட்டுமே வரும். அரசாங்கத் தரப்பிலே பதில் சொல்வதாக வராது. இதைத் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இனி எதையும் எடுக்கவில்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

2. அறிக்கைகள் அளித்தல்

பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா, இருக்கையில் இல்லை. அவர் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராஜேந்திரன்.

***திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2009-2010 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 138 முதல் 142 வரையிலான 5 அறிக்கைகளைக் குழுத் தலைவர் அவர்களின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.